15.4.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## நதிகள் இணைப்பை விரைவுபடுத்த பணிக் குழு



நதிகள் இணைப்பை விரைவுபடுத்தும் விதத்தில், மாநிலங்களுக்கிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்காக மத்தியப் பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினர் பி.என்.நவலவாலா தலைமையில் சிறப்புப் பணிக் குழுவை மத்திய அரசு அமைத்தது. இதுகுறித்து மத்திய நீர்வளத் துறை செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது: நதிகள் இணைப்பு தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அமலாக்கத் திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும், அதற்கான நிதி சார்ந்த திட்டங்களை பரிந்துரைப்பதற்காகவும் சிறப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தேசிய தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட இணைப்புத் திட்டங்களை ஆராய்வதுடன், தற்போதைய திட்டத்தின் சாத்தியமற்ற இணைப்புகளுக்கு மாற்றுத் திட்டங்களையும் இந்தக் குழு பரிசீலிக்கும். மேலும், ஒவ்வொரு நதிநீர் இணைப்புத் திட்டம் தொடர்பான பொருளாதார சாத்தியக்கூறு, சமூகப் பொருளாதாரம், சுற்றுச்சூழல் பாதிப்புகள், அப்பகுதியில் உள்ளவர்களை வேறு பகுதியில் குடியேற்றுவது ஆகியவை குறித்த மதிப்பீட்டு நெறிகளையும் பணிக்குழு உருவாக்கும். நதிகள் இணைப்பு தொடர்பாக மாநிலங்களுக்கு இடையே ஒருமித்த கருத்தை இந்தக் குழு ஏற்படுத்தும். நதிகள் இணைப்பு தொடர்பான உரிய வரைவுத்திட்டத்தையும் அளிக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நதிகள் இணைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள கேன், பேத்வா நதிகளை இணைக்கும் திட்டத்தை மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்

மூலம், கேன் நதியில் மிகுதியாக ஓடும் நீர், குறைந்த அளவில் நீர் ஓடும் பேத்வா நதியுடன் கால்வாய் வழியாக இணைக்கப்படும். இதனால், மத்தியப் பிரதேசமும், உத்தரப் பிரதேசமும் பயனடையும். நதிகள் இணைப்பின் மூலம், குடிநீர் விநியோகம், மீன்வளம், மாசுக் கட்டுப்பாடு போன்ற நன்மைகள் ஏற்படுவதுடன், 3.5 கோடி ஏக்கர் நிலங்களுக்கான நீர்ப்பிடிப்புத் திறனும், கூடுதலாக 34,000 மெகாவாட் நீர் மின்சார உற்பத்தியும் கிடைக்கும் என்று நீர்வளத் துறை தெரிவித்துள்ளது. நதிகள் இணைப்பு தொடர்பான கோரிக்கை, கடந்த 1980களில் இருந்து எழுந்து வருகிறது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, இதற்கான பணிகளைத் தொடக்கியது. எனினும், இந்தத் திட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டதால், நதிகளை இணைக்கும் திட்டம் முடங்கியது. அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், நதிகள் இணைப்புத் திட்டத்தை மேற் கொள்ளுமாறு மத்திய அரசுக்கு கடந்த 2013ஆம் ஆண்டு உத்தரவிட்டது. எனினும், இது தொடர்பான நடவடிக்கைகள் தாமதமாகின. இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு பதவியேற்றதும் நதிகள் இனைப்புக்கான பணிகள் மீண்டும் தொடங்கின. இது தொடர்பான விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக, கடந்த ஆண்டு ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டது.

**<u>தமிழகத்தின் உள் மாவட்டங்களில், அடுத்த 24 மணி நேரத்தில் மழை பெய்ய வாய்ப்பு</u>**

தமிழகத்தின் உள் மாவட்டங்களில், அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: வங்கக் கடல் காற்றும், அரபிக் கடல் காற்றும் சேர்ந்து வீசுகிறது. இதன் காரணமாக, மேலடுக்கில் ஒரு சாதகமான காற்று உருவாகியிருக்கிறது. இந்த சாதகமான காற்றானது, தென்னிந்திய தீபகற்பப் பகுதி மேலடுக்கு முழுவதும் தோன்றியிருக்கிறது. இது ஒரு அரிதான நிகழ்வாகும். ஆகையால்,

அடுத்து வரும் இரண்டு நாள்களுக்கு மாநிலத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் மழையும், ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

110 மி.மீட்டர் மழை:

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் பரவலாக மழை பதிவாகியுள்ளது. இவற்றில் திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே. பேட்டை, பள்ளிப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஆகிய இடங்களில் அதிகபட்சமாக தலா 110 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அதே போல் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் 70 மி.மீ, திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை, வேலூர் மாவட்டம் களவாயில் 60 மி.மீ, போளூர், சங்கரன்கோயில், சோளிங்கர், பூண்டி, ஆம்பூர் ஆகிய இடங்களில் தலா 50 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். தமிழகத்தின் உள் மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்த வரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். இருப்பினும், நகரின் ஒரு சில பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.மாநகரின் குறைந்தபட்ச, அதிகபட்ச வெப்பநிலை முறையே 75, 93 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் பலத்த மழை

ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் திங்கள்கிழமை முதல் இரண்டு நாள்களாக பலத்த மழை பெய்தது. இப்பகுதியில் உள்ள செங்குடி, வண்டல், வரவணி, பாரனூர், சனவேலி, ஏ.ஆர். மங்கலம் பகுதியிலும் திங்கள்கிழமை பலத்த மழை பெய்தது. இந்த மழையின் மூலம் இந்த ஆண்டு மிளகாய் விளைச்சல் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## "மா'வைக் காக்க அற்புத இயற்கை வேளாண்மை வழிமுறைகள்



ஒவ்வொரு பகுதியிலும் இன்று இயற்கை வேளாண் முறைகள் கடைபிடிப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இயற்கை வேளாண்மை செய்து வரும் விவசாயிகள் தனது நிலத்திற்கு "அங்ககச் சான்று' பெற முன்வர வேண்டும். இந்த உத்தி மூலம் ஏற்றுமதி செய்தும் லாபம் பெற வழி உள்ளது. குறிப்பாக "அல்போன்சர்' ரகம் காதர் என்றும் குண்டு என்றும் பாதாமி என்றும் அழைக்கப்படும் இந்த ரகம் பிரசித்தி பெற்று நல்ல விலை தருவதால் தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத்துறை மூலம் அரசு பழப்பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது. இயற்கை வேளாண்மை எனும் செலவு குறைந்த உத்தி மூலம் நீண்டகால, நிரந்தர வரவுக்கு வழி உள்ளது. சுற்றுச்சூழல் பாதிக்காது. உடல் நலம் பேணவும், சந்ததியினருக்கு புதுப்புது நோய்கள் வராமல் தடுக்கவும் உதவுவதால் எல்லா இடத்திலும் எல்லாப் பயிருக்கும் பலவித உத்திகள் உள்ளதால் நல்ல மகசூல் மட்டுமல்ல. வரவையும் பல மடங்கு அதிகரிக்கலாம். இயற்கை வேளாண்மைக்கு உறுதுணையான பல இடுபொருட்களில் உயிர் உரங்கள், மண்புழு உரம், பஞ்சகவ்யா, தக கவ்யா, மண்புழுகுவியல்கள், சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி, அசோலா, பசுந்தழை உரங்கள், பசுந்தழை உரப்பயிர் பயன்பாடு, பயிர் கழிவுகள் உரமாக்குதல், மிருக கழிவுகள், கம்போஸ்ட் வகைகள் பயன்பாடு பலவித சாம்பல்கள், பலவித பிண்ணாக்கு மற்றும் இலைச்சாறுகள் உள்ளன. இவை தவிர விவசாயிகள் கடைபிடித்திட உதவும் உழவியல் உத்திகளாக பல பயிர் சாகுபடி ஊடுபயிர் சாகுபடி, நிலப்போர்வை உதவும். பசுந்தாள் உரப்

பயிர்களான சீமை அகத்தி, சணப்பை தக்கைப்பூண்டு, பில்லிப்பயறு கொளுஞ்சி, அவுரி முதலியவற்றை பயிர் சுழற்சியில் சேர்த்தல் நல்லது. பசுந்தழைச் செடிகள் கிளைரிசிடியா, ஆவாரை, ஆடாதோடா, எருக்கு மற்றும் மலைப்பூவரசு , பூவரசு மற்றும் புங்கம் மரங்களையும் பயன்படுத்தலாம். தமது தோட்டத்திற்கு தேவையான மண்புழு உரத்தினை அங்கே வளர்க்கப்படும் மிருகங்களான ஆடு, மாடு, குதிரை மற்றும் செம்மறி ஆடு முதலியவற்றில் கழிவுகளைப் பயன்படுத்தியும் தயாரிக்கலாம். அங்கே கிடைக்கும் கழிவுகளை மீள் சுழற்சி செய்து பயன்படுத்துவது அற்புத செலவில்லா உத்தியாகும். எந்தப் பயிர் சாகுபடி செய்தாலும் பலவித எளிய உத்திகளுடன் ஏற்ற ஊடுபயிர் மற்றும் இணைபயிர் தேர்வு செய்தால் கூடுதல் வரவும் உண்டு. தேனீ வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பும், இதர பறவைகளான கோழி, வாத்து, காடை, வான்கோழி வளர்ப்பதும் வாய்ப்புள்ள தருணம் மேற்கொள்ளலாம். பாரம்பரிய உத்திகளில் விதை நேர்த்திக்கு புகையிலைச்சாறு பயன்பாடு, சாணிப்பால் பயன்பாடு செம்மண் கலந்து விதைகளை முலாம் பூசுதல் உரிய பருவம் விதைப்பது, பறவை இருக்கையாக பழைய பானைகள் பயன்பாடு, பொறிப்பயிராக ஆமணக்கு, பொரியல் தட்டை சாகுபடி முதலியன நெடுநாள் முதலாக வழக்கில் உள்ளதால் தேவைப்படும் பகுதிகளில் பயன்படும். மா சாகுபடியில் மேற்கூறியுள்ள உத்திகளில் பலவற்றைக் கடைப்பிடித்தால் உயர் லாபம் பெறலாம். மேலும் விபரம் பெற 98420 07125 என்ற எண்ணில் மா சாகுபடியாளர்கள் அணுகலாம்.

**- பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலை.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>



புதிய எண்ணெய்வித்து "சியா' மற்றும் சிறுதானியப்பயிர் "கினோவா' : மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் கீழ், கர்நாடக மாநிலம் மைசூருவில் மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. "சியா' என்ற எண்ணெய்வித்து பயிரையும் "கினோவா' என்ற சிறுதானியப் பயிரையும் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. உலகளவில் இந்த

தானியங்களுக்கான சந்தை வாய்ப்பு பெரியளவில் உருவாகியுள்ளது. "சியா' என்ற எண்ணெய்வித்து தானியத்தில் கொழுப்புச்சத்து குறைவு. சிறுதானிய ரகமான "கினோவா' வில் 14 சதம் புரதம் இருக்கிறது. இதை அதிக புரதச்சத்து உள்ள தானியம் என்று ஐநா சபை அங்கீகரித்து உள்ளது. இரண்டு ரகங்களும் சூப்பர் புட் என்று உலகளவில் பிரபலமாகி வருகின்றன. ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் மாவட்டத்தில் கினோவாவை வறட்சியான நிலங்களில் விவசாயிகள் பயிர் செய்து விளைவித்துள்ளனர். சியா, கினோவா ஆகியவற்றை ஜூன், ஜூலை, அக்டோபர், நவம்பர் மாதம் என இரு பருவங்களில் பயிரிடலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு முகவரி : Head Information and Publicity CFTRI, Mysore570 020; Telephone: 0821 252 4534 / 251 5910. email : ttbd@cftri.res.in. Website: www.cftri.res.in.

திராட்சைக்கு உயிர் உரங்கள்: திராட்சை கொடி நடுமுன் செடி நடுவதற்காக தோண்டப்பட்ட குழியில் உள்ள மண், திராட்சை கொடி நன்றாக வளர்வதற்கு வேண்டிய இடுபொருட்களை கொண்டிருக்க வேண்டும். அதற்கு உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் சூடோமோனாஸ் போன்ற உயிர் உரங்களை இடுதல் அவசியம். அத்துடன் இவற்றை நன்கு மக்கிய தொழுஉரத்துடன் கலந்து இடுவது அவசியமாகும். குழியில் இடவேண்டிய அளவுகள் - அசோஸ்பைரில்லம் - 50 கிராம், பாஸ்போபேக்டீரியா 50 கிராம், சூடோமோனாஸ் 50 கிராம், டிரைபேமிக்ஸ் 100 கிராம், நன்கு மக்கிய தொழுஉரம் 20 கிலோ.

மிளகு நாற்றங்கால் : பயிர் பெருக்கத்திற்கான மிளகு தண்டுப் பதியன்களை முன்பே தயார் செய்யாத நிலையில் பயிர் பெருக்கத்திற்கான பணிகள் தொடரலாம். முன்னமே அடையாளமிட்டு சுருட்டி வைத்த ஓடு தண்டுகளை மரக்குச்சிகளிலிருந்து பிரிக்க வேண்டும். அதிகமாக முதிர்ச்சியடைந்த மற்றும் முதிர்ச்சியடையாத கொடியின் பாகங்களை அகற்ற வேண்டும். பின்னர் ஓடு தண்டின் நடுப்பகுதியை 2-3 கணுக்களை உடைய துண்டுகளாக வெட்ட வேண்டும். மேல் மண், மணல் மற்றும் தொழுஉரம் ஆகியவற்றை 3:1:1 என்ற விகிதத்தில் கலந்து 6 அங்குலம் நீளம், 4 அங்குலம் அகலம் உடைய பாலிதீன் பைகளில் நிரப்பி அதில் தண்டுப் பதியன்களை நட வேண்டும். பாலிதீன் பையின் அடிப்பாகத்தில் போதுமான அளவில் துளைகள் இட வேண்டும்.

பந்தலில் பாலிதீன் பைகளை வரிசையாக அடுக்கி தண்ணீர் ஊற்ற வேண்டும். இஞ்சியின் பயன்கள் : சளியுடன் கூடிய இருமல் கட்டுப்பட - இஞ்சியை இடித்து சாறு எடுக்கவும். ஒரு தேக்கரண்டி அளவு சாறுடன் சிறிதளவு தேன் கலந்து தினமும் மூன்று வேளைகள் ஏழு நாட்களுக்குப் பருகவும். பசியின்மை மற்றும் வயிற்றுப் பொருமல் தீர - முற்றிலும் பசுமையான இஞ்சியின் மேல் தோலை நீக்கி, பின்னர் சிறு துண்டுகளாக நறுக்கி சுத்தமான தேனில் இஞ்சித்துண்டுகள் மூழ்கி இருக்குமாறு ஊறவைக்க வேண்டும். நன்கு ஊறிய பின்னர்தினமும் இரண்டு துண்டுகள் வீதம் உணவிற்கு முன்னர் மென்று தின்ன வேண்டும். வாந்தி கட்டுப்பட - இஞ்சிச்சாறும், வெங்காயச்சாறும் வகைக்கு ஒரு தேக்கரண்டி எடுத்து கலந்து, சிறிதளவு தேன் சேர்த்து உள்ளுக்குச் சாப்பிட வேண்டும். - **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

<u>**நாவல் மரத்தில் நல்ல பலன் கிடைக்கிறது**</u>



கொடைரோடு மெட்டூரை சேர்ந்த விவசாயி சி.ஐ.ஜெயக்குமார் ஒரு ஏக்கருக்கு நாவல்பழ சாகுபடி செய்தார். 96 மரங்கள் உள்ளன. சாதாரணமாக நாவல் மரங்கள் 30 முதல் 35 அடி வரை வளரும். அவர் ஆண்டுதோறும் கவாத்து செய்வதால் 15 அடி உயரமுள்ள செடிகளாக வளர்ந்துள்ளன. இயற்கை முறையில் உரமிடுகிறார். அசோஸ்பைரில்லம், ரைசோபியம், சூடோமோனாஸ், மாட்டு எலும்பு சாம்பல், பஞ்சகாவ்யம் போன்ற இயற்கை நுண்ணூட்ட சத்துகளை பயன்படுத்துகிறார். நோய் தாக்குதலை தவிர்க்க இஞ்சிச்சாறு, மஞ்சள் பொடியை பயன்படுத்துகிறார். நான்கு ஆண்டுகளில் இருந்து பழம் காய்க்கின்றன. ஒரு மரத்தில் 60 கிலோ வீதம் ஏக்கருக்கு 5.5 டன் கிடைக்கிறது. சாதாரணமாக ஒரு ஏக்கரில் 2 டன் மட்டுமே மகசூல் கிடைக்கும். பழம் 5 கிராம் மட்டுமே இருக்கும். பறிக்கும்போதே பாதி பழங்கள் சேதமாகிவிடும். இங்கு ஒரு பழம் 17 முதல் 20 கிராம் இருக்கிறது. உயரம் குறைவாக இருப்பதால் பழங்களை சேதமின்றி பறிக்கின்றனர். விவசாயி கூறியதாவது: ராஜமுந்திரியில் "ஜம்பு' ரக நாவலை வாங்கி வந்து பயிரிட்டேன். ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே

செலவானது. ஒவ்வொரு மரமும் 22க்கு 22 அடி இடைவெளி உள்ளது. அதிக தண்ணீர் தேவை யில்லை. 15 நாட்களுக்கு ஒருமுறை பாய்ச்சுவேன். மே முதல் ஜூலை வரை பழங்களை பறிக்கிறோம். நாவல் மரத்தை பொறுத்தவரை ஒரு ஆண்டு நல்ல விளைச்சலும், அடுத்து ஆண்டு அதில் பாதி மட்டுமே கிடைக்கும். ஒரு கிலோ ரூ.150 க்கு விற்கிறோம். சென்னை பசுமை அங்காடிகளுக்கு அனுப்புகிறேன். எங்கள் பண்ணையில் "நாவல் ஜூஸ்' தயாரிக்கிறோம். 700 மி.லி., ஜூஸ் பாட்டிலை ரூ.170 க்கு விற்கிறோம். ஆண்டிற்கு குறைந்தது ரூ.5 லட்சம் வரை லாபம் கிடைக்கும், என்றார். இவரை தொடர்பு கொள்ள- 98659 25193.

## <u>தென்காசியில் பலத்த மழை குற்றாலம் அருவிகளில் வெள்ளம்</u>

திருநெல்வேலி: தென்காசியில் நேற்று மாலையில் பலத்த மழை பெய்தது. குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் குறைந்து அவ்வப்போது மழை பெய்துவருகிறது. நேற்று மாலையில் தென்காசி, செங்கோட்டை,குற்றாலம் உள்ளிட்ட மேற்குதொடர்ச்சிமலைப் பகுதியில் பலத்த மழை பெய்தது. இடி,மின்னலுடன் பலத்த மழை பெய்ததால் இரவு ஏழு மணிக்கு பிறகு குற்றாலம் மெயின்அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஐந்தருவி, பழையகுற்றாலம் <உள்ளிட்ட மற்ற அருவிகளிலும் தண்ணீர் கொட்டியது. இரவு முழுவதும் அருவிகளில் தண்ணீர் கொட்டும் அளவுக்கு மழை இருந்தது. கோடைமழை என்பதால் தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே அருவிகளில் பகலில் தண்ணீர் கொட்டும் நிலை உள்ளது. திடீர் கோடை மழையினால் நெல்லை மாவட்டம் முழுவதுமே வெப்பத்தின் தாக்கம் குறைந்து குளுகுளு சீசன் நிலவுகிறது.

## <u>தஞ்சை மாவட்டத்தில் கனமழை</u>

தஞ்சாவூர்,:தஞ்சையில் நேற்று முன்தினம் மழை பெய்தது. அதிகபட்சமாக ஒரத்தநாட்டில், 51.2 மி.மீ., மலை கொட்டித்தீர்த்தது.தஞ்சை மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக, கோடை வெயில் கொளுத்தியது. இதனால், பகலில்

வெளியே நடமாட முடியாமல், பொதுமக்கள் வீடுகளில் முடங்கி கிடந்தனர். இந்நிலையில், தஞ்சையில் நேற்று முன்தினம் சாரல் மழை பெய்தது. ஒரு மணி நேரம் நீடித்த மழை காரணமாக, கோடை வெப்பம் தணிந்து, குளிர் காற்று வீசியது.மாவட்டத்தில், தஞ்சை நகரில், 12 மி.மீ., திருவையாறில், 10.2 மி.மீ., கல்லணையில்,18 மி.மீ., திருக்காட்டுப்பள்ளியில்,13.4 மி.மீ., பாபநாசத்தில், 8 மி.மீ., கும்பகோணத்தில், 7மி.மீ., பேராவூரணியில்,12 மி.மீ., பூதலூரி,13.2 மி.மீ., அதிகபட்சமாக ஒரத்தநாட்டில், 51.2 மி.மீ., மழை பதிவானது.

## தளியில் 24 மி.மீ., மழைப்பதிவு

ஓசூர்:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தொடர்ந்து இரு நாட்களாக கனமழை பெய்தது. இதில், ஓசூர் அடுத்த தளியில், அதிகபட்சமாக, 24 மில்லி மீட்டர் மழை பதிவானது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக, கோடை வெயில் வாட்டி வதைத்தது. அக்னி நட்சத்திரம் தொடங்கும் முன்பாகவே, கடும் வெயில் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில், நேற்று காலை முதல், வெயிலின் தாக்கம் சற்று குறைவாக காணப்பட்டது.மாலை நேரத்தில் கனமழை பெய்ததால், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வெயிலின் தாக்கம் குறைந்து, இதமான காற்று வீசியது. தொடர்ந்து, இரு நாட்கள் கனமழை பெய்ததால், விவசாயி மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் அதிகப்பட்சமாக, 24 மி.மீ., மழை பதிவாகி இருந்தது.தேன்கனிக்கோட்டை, 22, கிருஷ்ணகிரி, 8.4, ஓசூர், 5, அஞ்செட்டி, 4.3, சூளகிரி, 4 மி.மீ., என மொத்தம், மாவட்டம் முழுவதும், 67.7 மில்லி மீட்டர் மழை பதிவாகி, சராசரியாக, 5.6 மி.மீ., மழையளவு பதிவானது குறிப்பிடத்தக்கது.

# சிறுபாசன திட்டம் கணக்கெடுப்பு பணி தீவிரம்

ஓசூர்:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஐந்தாவது சிறுபாசன திட்ட கணக்கெடுப்பு பணி தீவிரமாக நடக்கிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த, 2013-14 ம் ஆண்டை அடிப்படையாக கொண்டு, ஐந்தாவது சிறுபாசன கணக்கெடுக்கும் பணி நடக்கிறது. கிருஷ்ணகிரி தாலுகாவில் உள்ள, ஜிஞ்சுப்பள்ளி, கம்மம்பள்ளி ஆகிய வருவாய் கிராமங்களில் நடந்து வரும் இப்பணியை, மண்டல புள்ளியில் இணை இயக்குனர் கமலக்கண்ணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளை கண்டறிதல், நீர் நிலையின் ஆழம், அகலம், பாசனம் செய்வதற்கு தகுதியான நிலை, விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்ட நிலம், நீர் நிலை தொடங்கப்பட்ட ஆண்டு, திட்டத்தின் வகை, திட்டம் நிறுவப்பட்டதற்கான செலவினம், நிதி ஆதாரம், நீர்நிலைகளின் பயன்பாடு, பாசன முறை போன்ற விவரம் சேகரிக்கப்படுகிறது.இதனை, எதிர்கால சிறுபாசன ஆதாரம் குறித்த திட்டம் தீட்ட பயன்படுத்த முடியும். இப்பணி, இந்தியா முழுவதும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ஐந்தாண்டுக்கு, ஒருமுறை, மத்திய அரசின் வழிகாட்டு தலின் படி, இப்பணி நடத்தப்படும். மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர் திட்டம் மற்றும் மேற்பரப்பு நீர்த்திட்டங்களான தோண்டப்பட்ட கிணறு, நீர்த்தேக்கம், ஏரி, குளம், குட்டைகளின் ஊற்று கால்வாய், ஆறு, ஓடை, தடுப்பணை, நீர்த்தேக்க தொட்டி, ஆழம் குறைவான குழாய் கிணறு, நடுத்தர குழாய் கிணறு மற்றும் சிறிய அணை கட்டு போன்றவை குறித்து கணக்கெடுக்கப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.அப்போது, கிருஷ்ணகிரி மாவட்ட புள்ளியியல் துணை இயக்குனர் மனோகரன், உதவி இயக்குனர் தியாகராஜன், வட்டார புள்ளியியல் ஆய்வாளர் சீனிவாசன், கலைச்செல்வி, வி.ஏ.ஓ., சரவணன், முருகன் உள்பட பலர் உடனிருந்தனர்.

## கோமாரி நோய் தடுப்பு சோதனை சாவடி விரைவில் திறப்பு

ஈரோடு:கோமாரி நோய் தடுப்பு சோதனை சாவடி கட்டிட பணிகள் நிறைவடைந்ததாக, கால்நடை பராமரிப்புத்துறை, ஈரோடு மண்டல இணை இயக்குனர் முருகன் தெரிவித்தார். இதுபற்றி, அவர் கூறியதாவது:ஈரோடு வனப்பகுதி, திம்பம் அருகே, கடந்த, 2012 - 13ம் ஆண்டுக்கான மத்திய அரசின் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ், 14 லட்சம் ரூபாய் செலவில், கோமாரி நோய் தடுப்பு சோதனை சாவடி கட்ட திட்டமிட்டது. இந்த சோதனை சாவடியால், அண்டை மாநிலங்களில் இருந்து வரும் பறவை காய்ச்சல், கோமாரி நோய்களை கண்டறிந்து, கால்நடைகளுக்கு, இங்கு சிகிச்சை அளித்து, நமது மாவட்டத்துக்குள் பரவாமல் தடுக்கவும், அந்த கால்நடைகளை திருப்பி அனுப்பவும் வாய்ப்பு ஏற்படும். மேலும், கால்நடை ஏற்றி வரும் வாகனம், கோழி வாகனங்களில், கிருமி நாசினி தெளித்த பின்னரே, தமிழகத்துக்குள் நுழைய அனுமதிப்பார்கள். இச்சாவடியால், அப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு, கூடுதலாக சிகிச்சை அளிக்க முடியும். இந்த கட்டிடத்தில், கால்நடை உதவி மருத்துவர் அறை, மருத்துவ அலுவலகம், கால்நடை ஆய்வாளர் அறை, கால்நடை பராமரிப்பு உதவி அலுவலர் அறை என பல அறைகள் உள்ளன. இதனால், திம்பம் மற்றும் சுற்றியுள்ள பல விவசாய கால்நடைகளு க்கு, இந்த சோதனை சாவடி மை யம், ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். தவிர, அங்கேயே, 24 மணி நேர கால்நடை ஆய்வாளர், ஆய்வாளர், உதவியாளர் என பல அலுவலர்கள் பணியில் இருப்பார்கள். இச்சோதனை சாவடி கட்டிடம், கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் செயல்பாட்டுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என்றார்.

## வெள்ளோடு பறவைகள் சரணாலயம்: மழைக்கால மரக்கன்று உற்பத்தி பணி தீவிரம்

ஈரோடு:நகர்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில், வரும் மழைக்காலத்தில் மரக்கன்றுகள் நட, வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில் மரக்கன்று உற்பத்தி செய்யும் பணி, தீவிரம் அடைந்துள்ளன. இது குறித்து ஈரோடு வட்ட வனத்துறை ரேஞ்சர் முருகேசன் கூறியதாவது:வெள்ளோடு பறவைகள் சரணாலயம், 77.18 ஹெக்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் பறவைகள் வரத்து அதிகரித்து வருகிறது. இதனை காண, பொதுமக்கள் மட்டுமின்றி, பல ஊர்களில் இருந்தும் சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்றனர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளுக்காக, ஆண்டுதோறும் வனத்துறைக்கு மரக்கன்றுகள் வழங்கப்படும். நடப்பாண்டில், ஈரோடு மாவட்ட வனத்துறைக்காக, 67,000 மரக்கன்றுகள் நட, தமிழக அரசு உத்தரவிட்டது.அதன் படி, சத்தியமங்கலம், 10,000, ஈரோடு, 47,000, ஆசனூர், 10,000, என மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டது. ஈரோடு மாநகரத்தில், 47,000 மரக்கன்று நட, வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில் பணிகள் துவங்கியுள்ளன. அதில் புங்கன், பிய்யன், புளியன், அரசு, வேம்பு, பாதானி, சிங்கப்பூர் செடி, புதிய வேடந்தாங்கல் வரவாக நீர் கடம்பு, பூவரசு, இலுப்பை, அலங்கார கொண்ணை, மந்தாரை, வாகை, ஆயாமரம் என பல வகை மரக்கன்று உற்பத்தி செய்யும் பணி, கடந்த ஒரு மாதத்துக்கு முன்பே துவங்கி உள்ளது. தற்போது, 5 கிலோ எடைக்கான பாலித்தின் கவரில், ஒரு அடி மற்றும் ஒன்றரை அடி உயரம் உள்ள மரக்கன்றுகள் வளர்ந்துள்ளன. இந்த, 5 கிலோ கவரில் இருந்த மரக்கன்று களை, தற்போது, 10 கிலோ எடைக்கான பாலித்தின் கவரில் மாற்றி வைக்கும் பணி நடந்து வருகிறது. அப்போது, மரக்கன்றின் தண்டு பகுதிகள் தடித்து, நல்ல முறையில், நான்கு அடிக்கும் மேல் வளர்ச்சி பெற்றிருக்கும். இந்த மரக்கன்றின் பருவமும், அக்டோபர் மாத மழைக்காலமும் ஒருங்கே வரும். அப்போது, மரக்கன்றுகளை வைக்கும் பணி துவங்கும். அதற்கு முன் மரக்கன்று நட, குழிகள் தோண்டும் பணி நடைபெறும்.

மழைக்காலத்தில் மரக்கன்றுகள் நடுவதன் மூலம், ஈரப்பதத்தில் செழிப்பாக வளரும், என்றார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 17ம் தேதி, காலை 11:00 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம் மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

## தாண்டிக்குடி, பழநியில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

தாண்டிக்குடி : தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் கடந்த மூன்று தினங்களாக தொடர் மழை பெய்து வருவது விவசாயிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. கோடை துவங்கிய நிலையில் கடந்த சில மாதங்களாக சுட்டெரிக்கும் வெயில், வறண்ட வானிலை நீடித்தது. கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு துவங்கிய மழை மாலை 3 மணிக்கு ஓய்ந்தது. மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. எதிர்பாராத மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். இதுவரை தடியன்குடிசையில் 56 மி.மீ., தாண்டிக்குடியில் 42.மி.மீ., மழை பெய்துள்ளது. மழையால் தடியன்குடிசை நறுமண சுற்றுலா தல பகுதியில் குளிர்ச்சி நிலவுகிறது. இந்த மழை மலை, குறுவிவசாயப் பயிர்களுக்கும் ஏற்றதாக அமைந்தது. தொடர் மழையால் வறண்ட நீரோடைகளில் நீர்வரத்து அதிகரித்து குடிநீர் பிரச்னை தீர்ந்துள்ளது. மேலும் மலையடிவார அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பழநி: பழநியில் கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. மழை

பெய்யாது என்ற ஏக்கத்துடன் இருந்த பழநி நகர மக்களை குளிர்விக்கும் வகையில் நேற்று முன்தினம் மாலை 5.20 மணி முதல் 6.40 மணி வரை கனமழை பெய்தது. பின் சாரல் மழைபெய்தது. ஆர்.எப்.,ரோடு பூங்காரோடு, பழையதாராபுரம் ரோடு, அடிவாரம் ரோடு, பஸ் ஸ்டாண்ட் தாழ்வான பகுதியில் தண்ணீர் தேங்கி ஒடியதால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர். வரதமாநதி அணைப்பகுதி, சட்டப்பாறைப்பகுதி, பாலசமுத்திரம் உட்பட பலப்பகுதிகளில் மழைபெய்தது. இரண்டு மாதங்களுக்கு பிறகு மழை பெய்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>வேளாண் குறைதீர் கூட்டம்</u>

கரூர்,:""கரூர் மாவட்டத்தில், 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், வரும், 17ம் தேதி நடக்கிறது. இதில் பங்கேற்று பயன்பெற வேண்டும்," என்றும் கலெக்டர் ஜெயந்தி, தெரிவித்துள்ளார். இதுகுறித்து கலெக்டர் கூறியதாவது:கரூர் கலெக்டர் அலுவலகத்தில், வரும், 17ம் தேதி, வெள்ளிக்கிழமை, 11 மணிக்கு, வேளாண் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கத்தினர், விவசாயம் சார்ந்த மனுக்கள் பெறப்பட்டு, விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு தெரிவித்தார்.

## <u>கி.ராயபுரத்தில் மழை</u>

லாலாபேட்டை,:கிருஷ்ணராயபுரம் தாலுகா பகுதியில், கடந்த, ஆறு மாதங்களாக மழை இல்லாமல், அனல் காற்று வீசியது. நேற்று முன்தினம் மாலை, 6 மணி முதல் இரவு, 9 மணி வரை பலத்த மழை பெய்தது. கிருஷ்ணராயபுரம், மகாதானபுரம், மகிளிபட்டி, வல்லம், லாலாபேட்டை, பஞ்சபட்டி, பாப்பாகபட்டி, வயலூர், இரும்பூதிபட்டி, சிவாயம் ஆகிய பகுதியில் மழை விட்டு விட்டு பெய்ததால் வெப்பம் தணிந்தது. மழை காரணமாக விவசாயத்துக்கு ஓரளவு தண்ணீர் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சிடைந்தனர். மழை காரணமாக லாலாபேட்டை சுற்றியுள்ள பகுதியில்வாழைகள் கீழே சாய்ந்து விட்டதால், விவசாயிகள்

பாதிக்கப்பட்டுள்ளனர். கிருஷ்ணராயபுரத்தில் இருந்த தற்காலிக நிழற்கூடம் முற்றிலும் சேதமடைந்தது.

## ரூ.54 லட்சத்திற்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்:நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த மஞ்சள் ஏலத்தில், 54 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்.தனியார் மஞ்சள் மண்டி உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனம் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,084 மூட்டை விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 10 ஆயிரத்து, 599க்கும், குறைந்த பட்சம், 8,396 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம், அதிக பட்சம், 8,799க்கும், குறைந்த பட்சம், 7,096 ரூபாய்க்கும் ஏலம்போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 21 ஆயிரத்து, 339க்கும், குறைந்த பட்சம், 14 ஆயிரத்து, 71 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், 1,084 மூட்டை மஞ்சள், 54 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

## கோடை மழையால்விவசாயி மகிழ்ச்சி

தர்மபுரி:தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால், வெயிலின் தாக்கம் குறைந்து வருவதால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில், கோடை காலம் துவங்கும் முன்பே, வெயில் கொளுத்தி வந்தது. இதனால், பொதுமக்கள் கடும் அவதி அடைந்து வந்தனர். கடந்த சில நாட்களுக்கு முன், தர்மபுரி மாவட்டத்தில், வெயிலின் அளவு, 100 டிகிரிக்கு மேல் தாண்டியது. வெயிலின் காரணமாக, ஏரி, குளம், அணை ஆகிய நீராதாரம் வற்றியது. இதனால், விவசாயிகள் கவலை

அடைந்தனர். இந்நிலையில், அவ்வப்போது பெய்து வந்த சாரல் மழையால், வெயிலின் தாக்கம் குறைந்து, குளுமையான சீதோஷண நிலை ஏற்பட்டது. இதனால், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்தனர். குறிப்பாக, தர்மபுரி நகரில் பெய்த மழையால், நேதாஜி பைபாஸ் சாலை உட்பட, நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள சாலைகளில், மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.கோடை மழையால், பொதுமக்கள் மட்டுமல்லாது, விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## செந்தூரா மாம்பழம் சீஸன் தொடக்கம்

தர்மபுரி:தர்மபுரி மாவட்டத்தில், முன் ரக பருவமான செந்தூர மாம்பழம் விற்பனை வர தொடங்கிதையடுத்து, விலை அதிகரித்துள்ள போதிலும், பொதுமக்கள், மாம்பழங்களை ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். தமிழகத்தில், மா உற்பத்தியில், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், தேனி உள்ளிட்ட மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தாண்டு, போதிய பருவ மழையில்லாத காரணத்தால், மா விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், மா சீஸனும் கால தாமதம் ஆனது. ஒரு சில பகுதிகளில், பின் ரக பருவங்களான பெங்களூரா உள்ளிட்ட ரகம், ரசாயன கல் மூலமாக, பழுக்கவைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.இந்நிலையில், வழக்கமான முன் ரக பருவமான செந்தூரா மாம்பழம், தற்போது, தர்மபுரி உட்பட பல்வேறு மாவட்டங்களில் விற்பனைக்கு வந்துள்ளது. இது, மாம்பழ பிரியர்களுக்கு, மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.ஒரு கிலோ சன்ன ரகம், 60 ரூபாய் வரையிலும், பெரிய ரகம், 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை அதிகமாக இருந்தாலும், ருசிக்காக பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்பனை செய்யுங்கள் வேளாண்மை அதிகாரி வேண்டுகோள்

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்பனை செய்யுங்கள் என்று வேளாண்மை அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். திருவண்ணாமலை வேளாண்மை துணை இயக்குனர்(வேளாண் வணிகம்) கி.ராஜேந்திரன் வெளியிட்டுள்ள கூறி இருப்பதாவது:இந்தியாவில் எள் உற்பத்தியில் 70 சதவீதத்தை மேற்கு வங்கம், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகிய 4 மாநிலங்கள் உற்பத்தி செய்கின்றன. மீதமுள்ள 30 சதவீதம் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரம், உத்தரபிரதேச மாநிலங்கள் உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டம் எள் உற்பத்தி யில் முன்னணி வகிக்கிறது. எள் பாசன சாகுபடி டிசம்பர்-ஜனவரியில் பயிரிடப்பட்டு மார்ச்-மே மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. ஏற்றுமதி சந்தையை பொருத்தமட்டில் சீனா தனக்கு தேவையான எள்ளை ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து நல்ல தரத்துடன் இந்தியாவை விட குறைந்த விலையில் இறக்குமதி செய்கின்றன. கடந்த தைப்பட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் எள் சாகுபடி பரப்பு 400 எக்டேர் அதிகரிக்கப்பட்டுள்ளது.தற்சமயம் சிவப்பு எள் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் குவிண்டாலுக்கு ரூ.6800 முதல் ரூ.8 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. ஏப்ரல்-மே அறுவடைக்கு வரும் தரமான சிவப்பு எள்ளின் விலை குவிண்டாலுக்கு ரூ.7500 முதல் 7700 வரை இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. மேலும் விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை. ஆகவே திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அறுவடை செய்த

எள்ளை உடனடியாக விற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

## வரத்து குறைந்ததால் புடலங்காய் விலை உயர்வு

சேலம், :சேலம் மாவட்டத்தின் தலைவாசல், ஓமலூர், பனமரத்துப்பட்டி, தாரமங்கலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நீள ரக புடலங்காய்களும் சேலம் மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்கு வரு கிறது. கடந்த இருவாரங்களாக அங்கிருந்து வரும் புடலங்காயின் வரத்து குறைந்துள்ளதால், விலை கிடுகிடு� வன உயர்ந்துள்ளது. சேலம் மார்க்கெட்டுக்கு செ ன்ற மாதத்தில் தினமும் 800 கிலோ வரை இருந்த புடலங்காயின் வரத்து, தற்போது 600 கிலோவாக குறைந்துள்ளது. இதனால் விலையும் கடந்த மாதத்தை காட்டிலும் உயர்ந்துள்ளது. கடந்த மாதத்தில் ஒரு கிலோ ரூ.12 ஆக விற் பனை செய்யப்பட்டு வந்த புடலங்காய், தற்போது விலை உயர்ந்து கிலோ ரூ.18 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## சேலம் மார்க்கெட்டுக்கு மாம்பழ வரத்து 15 டன்னாக உயர்வு பெங்களூரா, மல்கோவா வரத்து அதிகரிப்பு

சேலம், :சேலம் மார்கெட்டுக்கு மாம்பழ வரத்து 10 முதல் 15 டன்னாக வரத்து உயர்ந்துள்ளது. விற்பனை களைக்கட்டியுள்ளதால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தமிழகத்தில் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிகளவில் மாம்பழங்கள் உற்பத்தியாகின்றன. இம்மாவட்டங்களில் நடுசாலை, சேலம் பெங்களூரா, இமாம்பசந்த், பங்கனப்பள்ளி, குதாதத், மல்கோவா உள்பட பல்வேறு ரக மாம்பழங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மாம்பழ சீசன் களைக்கட்டும். நடப்பாண்டு அனைத்து பகுதிகளிலும் மாமரங்களில் காய்ப்பு நல்லமுறையில் பிடித்துள்ளது. மரங்களில் அறுவடை செய்யும் மாம்பழங்களை விவசாயிகள் மார்க்கெட்டுக்கு அனுப்பி வருகின்றனர். கடந்த வாரம் வரை சேலம் மார்க்கெட்டுக்கு 5 முதல் 6 டன் மட்டுமே மாம்பழங்கள் விற்பனைக்கு வந்தது. தற்போது மாமரங்களில்

அறுவடை சுறுசுறுப்படைந்துள்ளதால், மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. சீசன் களைக்கட்டியுள்ளதால் மார்க்கெட்டில் வாடிக்கையாளர்களின் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இது குறித்து சேலம் கடைவீதி மாம்பழ வியாபாரிகள் கூறியதாவது: சேலம் மாவட்டத்தில் நங்கவள்ளி, சூரபள்ளி, வனவாசி, மேட்டூர், ஜலகண்டாபுரம், ஓமலூர், கருமந்துறை, வரகம்பாடி, சங்ககிரி, சோரகை, மஞ்சவாடி கணவாய் திருச்செங்கோடு, காரிமங்கலம், பாலக்கோடு, அரூர், பர்கூர், காவேரிப்பட்டணம், வேப்பனப்பள்ளி உள்பட பல்வேறு பகுதிகளில் அதிகளவில் மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. இங்கு விற்பனைக்கு வரும் மாம்பழத்தை வாடிக்கையாளர்கள் 10 கிலோ முதல் 20 கிலோ வரை பெட்டிகளிலும், 12 பழங்கள் கொண்ட ஒரு டஜனும், கிலோ கணக்கிலும் வாடிக்கையாளர்கள் வாங்கிச்செல்கின்றனர். வரும் 20ம் தேதிக்கு மேல் 25 முதல் 30 டன்னாக வரத்து உயரும். நேற்று நிலவரப்படி ஒரு கிலோ மாம்பழம் ரகத்தை பொறுத்து ரூ.50 முதல் ரூ.150 வரை விற்கப்படுகிறது. மே 1ம் தேதிக்கு பின்னர் 50 டன்னுக்கு மேல் மாம்பழங்கள் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது. அப்போது மாம்பழ விலை குறைய வாய்ப்புள்ளது. சேலம் கடைவீதியில் சுமார் 20க்கும் மேற்பட்ட மொத்த மாம்பழ வியாபாரிகள் உள்ளனர். இங்குள்ள மொத்த வியாபாரிகளிடமிருந்து ஆத்தூர், தலைவாசல், மல்லூர், மேச்சேரி, மேட்டூர், ஓமலூர், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சில்லரை வியாபாரிகள், கூடை வியாபாரிகள், நடைப்பாதை வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகள் வாங்கிச்சென்று வியாபாரம் செய்து வருகின்றனர். விற்பனை வரும் மாம்பழங்கள் உடனடியாக விற்பனையாகி வருவதால் வியாபாரம் களைக்கட்டியுள்ளது. இவ்வாறு மாம்பழ வியாபாரிகள் கூறினர். ஒரு மாதத்தில் நீல மாம்பழம் வரும். மாம்பழ சீசனில் கடைசி ரகம் நீல மாம்பழமாகும். இந்த ரக மாம்பழங்கள் விற்பனைக்கு வந்தால்,

அந்த ஆண்டில் மாம்பழ சீசன் முடிகிறது என்று அர்த்தம். இந்த ரக மாம்பழம் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிகளவில் விளைகிறது. நீல மாம்பழங்கள் விற்பனைக்கு வர இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. மற்ற மாம்பழங்களின் விலையை விட நீல மாம்பழங்களின் விலை எப்போதும் குறைவாக தான் இருக்கும். ஒரு கிலோ அதிகபட்சமாக ரூ.30 முதல் ரூ. 60 வரை விற்பனைசெய்யப்படும்.

**<u>மாவட்டத்தில் பலத்த மழை</u>**

நாமக்கல், : நாமக்கல்லில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக கடுமையான வெப்பம் வீசி வருகிறது. இதனால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். கடுமையான வெப்பத் தால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து, தண்ணீர் பிரச்னையும் கிராமங்களில் தலை தூக்கியுள்ளது. இந்நிலையில் நேற்று இரவு சுமார் ஒரு மணி நேரம் நாமக்கல்லில் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பலத்த மழையினால் நகர்புறங்களில் மின்சாரமும் ஒரு மணி நேரம் துண்டிக்கப்பட்டது. திடீரென நகரில் பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. நாமக்கல்லில் பெய்த மழையால் வெப்பம் தணிந்து இரவில் குளிர்ந்த காற்று வீசியது.

**<u>அன்னாசிபழம் வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.30க்கு விற்பனை</u>**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு, சித்திரைவிசுவை முன்னிட்டு கேரள மாநில பகுதியிலிருந்து அன்னாசிபழம் வரத்து துவங்கியுள்ளது. ஒருகிலோ ரூ.30க்கு விற்பனை செய்யப்படுகிறது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டுக்கு தற்போது, கேரள மாநிலம் மலப்புரம், கொழிஞ்சாம்பாறை, சாலக்குடி, அங்கேஷ்வரி, கொரடி, பாட்டியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அறுவடை செய்யப்பட்ட அன்னாசிபழங்கள் அதிகளவு கொண்டு வரப்படுகின்றன. காந்தி மார்க்கெட்டில் குவிந்துள்ள அன்னாசிபழங்களை உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி உடுமலை, திருப்பூர், கோவை, பல்லடம், வால்பாறை உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள்

மொத்தவிலைக்கு விற்பனைக்காக வாங்கி செல்கின்றனர். ஒருகிலோ ரூ.25 முதல் ரூ.30வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டைவிட, விலை ஏற்றத்துடன் இருந்தாலும் சித்திரை விசு என்பதால் வியாபாரிகள் நேரில் வந்து அதிகம் வாங்கி செல்கின்றனர். மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், 'ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அன்னாசிபழம் வரத்து அதிகமாக இருக்கும். இருப்பினும் சித்திரை விசுவையொட்டி கேரள பகுதியில் இருந்து அன்னாசிபழம் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்காக கொண்டுவரப்பட்டுள்ளது. அன்னாசிபழம் வரத்து இன்னும் ஓரிரு வாரத்திற்கு தொடர்ந்திருக்கும்' என்றனர்

## <u>குன்னூர் தேயிலை ஏல மையத்தில் 76 % தேயிலை தூள் விற்பனை</u>

குன்னூர்,:குன்னூர் டீ டிரேடர்ஸ் அசோசியேஷன் (சிடிடிஏ) தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 15வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடந்தது. இதில் மொத்தம் 12.37 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 8.28 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.10 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாடு வர்த்தகர்கள் தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர். இதனால் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 விலை குறைந்தது. இதில் 76 சதவீத தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இந்தவார விலை நிலவரப்படி சாதாரண வகை இலை ரகத்தில் ரூ.50 முதல் ரூ.54, உயர்வகை ரூ.100 முதல் ரூ.160, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.54 முதல் ரூ.62, உயர் ரகம் ரூ.110 முதல் ரூ.160 விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.203, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.245 விலை கிடைத்தது. அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாளில் நடக்கிறது. இதில் மொத்தம் 14.05 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## திருச்சியில் திடீர் மழை

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் நேற்று திடீர் மழை பெய்து பூமியை குளிர்வித்தது.திருச்சி மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இதனால் பெரும்பாலானோர் பகலில் வெளியில் வரவே தயங்கினர். அக்னி நட்சத்திரம் ஆரம்பிக்கும் முன்பாகவே திருச்சியில் தொடர்ந்து வெயில் 100 டிகிரியை தாண்டியது. இந்த கோடை வெயிலை எப்படி சமாளிக்க போகிறோம் என்ற சிந்தனையிலேயே இருந்து வந்தனர். இந் நிலையில் நேற்று மதியம் வழக்கம்போல் வெயில் சுட்டெரித்தது. நேற்று மாலை 5 மணிக்கு மேல் திடீரென மேகங்கள் திரண்டு குளிர்ந்த காற்று வீசத் துவங்கியது. சிறிது நேரத்தில் காற்றுடன் மின் னல் தோன்றி, இடி இடித்தது. அதனைத்தொடர்ந்து திருச்சி மாநகர், மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்று டன் மழை பெய்யத் துவங்கியது. இந்த மழை இரவு 11 மணிவரை பெய்தது. அதன் பிறகு சாரல் மழைத் தூறிக்கொண்டே இருந்தது. இதனால் பூமி குளிர்ந்தது மட்டுமல்லாமல், வெயிலில் வாடிவந்த மக்கள் மனமும் குளிர்ந்தது. இந்த தீடீர் மழையால் சாலைகளிலும், மாநகரில் பல இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. இந்த மழையை எதிர்பார்க்காத வெளியூர் செல் லும் பயணிகள் நனைந்தபடியே சென்றனர். இந்த மழை இன்னும் சில தினங்களில் நீடிக்க வேண்டுமென வருணபகவானை பொதுமக்கள் வேண்டினர்.

## துறையூரில் 15ம்தேதி பருத்தி ஏலம் விவசாயிகளுக்கு அழைப்பு

திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக பருத்தி ஏலம் வருகிற 15ம்தேதி நடைபெறுவதால் விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்தாண்டு முதல் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளதால் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைதோறும் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. அதன்படி, வருகிற 15ம் தேதி (புதன்) காலை

மறைமுக பருத்தி ஏலம் நடக்கிறது. துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள் மறைமுக ஏலத்தில் பங் கேற்று பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## பயறு வகை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? விவசாயிகளுக்கு பயிற்சி

அன்னவாசல், : பயறு வகை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? என்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட் டம், அன்னவாசல் ஒன்றியம், இடையப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கூவாட்டுப்பட்டி கிராமத்தில் பயறு வகை சாகுபடியில் அதிக மகசூல் மற்றும் லாபம் பெறுவது எப்படி? என்பது குறித்து வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதனையொட்டி, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் பண்ணை பள்ளி மற்றும் செயல் விளக்க பயிற்சி முகாம் நடைபெற் றது. முன்னோடி விவசாயி சிங்கமுத்து வயலில் நடைபெற்ற இம்முகாம் பயறு உற்பத்தி மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய தலைப்புகளில் நடத்தப்பட்டது. முகாமுக்கு அன்னவாசல் வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் தலைமை வகித்தார். வம்பன் வேளாண் அறிவியல் மைய பயிர் பாதுகாப்பு விஞ்ஞானி மதியழகன், உளுந்து விதையில் விதை நேர்த்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி பயிற்சி அளித்தார். ம.ச.சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவனத் திட்ட ஒருங்கிணைப்பாளர் தட்சிணாமூர்த்தி வரிசை நடவின் முக்கியத்துவத்தையும், அதனால் ஏற்படும் மகசூல் நன்மைகள் குறித்தும் பயிற்சி அளித்தார். இதனைத் தொடர்ந்து, பயறு வகை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற் கான நவீன தொழில்நுட்ப முறைகள் மற்றும் அதிக வருவாய் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இந்த வயல்வெளி செயல் விளக்க பயிற்சி முகாமுக்கு உறுதுணையாகச் செயல்பட்ட விவசாயி சிங்கமுத்துவிற்கு ஊக்கத் தொகையாக காசோலை

வழங்கப்பட்டது. முடிவில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் அலுவலர் சுந்தரேசன் நன்றி கூறினார்.

**<u>வேளாண் திட்டங்களுக்கு ரூ.81.53லட்சம் ஒதுக்கீடு</u>**

சிவகங்கை, :சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் மையை இயந்திரமயமாக்குதல் திட்டத்தை செயல்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.81.53லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு பவர்டிரில்லர், களையெடுக்கும் இயந்திரம், கதிரடிக்கும் இயந்திரம், ரோட்டவேட்டர், உழவுகருவிகள், குழிபோடும் கருவிகள், வேளாண் கழிவுகளை பொடியாக்கும் இயந்திரம், மரக்கிளை வெட்டும்கருவி வழங்கப்பட உள்ளது. மேலும் டிராக்டரால் இயக்கப்படும் ஸ்ரடர் கருவி, கரும்புசோகை வெட்டும் கருவி, வைக்கோல் பேலர் கருவி, மருந்தடிக்கும் கருவி, தென்னைமரம் ஏறும் கருவி உள்ளிட்டவைகளும் வழங்கப்பட உள்ளன. 30முதல் 50சதவீத மானியத்தில் கீழ் சுமார் 181கருவிகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு ரூ.35.43லட்சம் மானியத்தில் 66கருவிகள் வழங்கப்பட உள்ளன. சிவகங்கை, காளையார்கோவில், இளையான்குடி, மானாமதுரை, இளையான்குடி மற்றும் திருப்புவனம் ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் உதவி செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, சிவகங்கை அலுவலகத்தை (போன்.04575-240288) தொடர்பு கொள்ள வேண்டும். தேவகோட்டை, கண்ணங்குடி, சாக்கோட்டை, கல்லல், எஸ்.புதூர், சிங்கம்புணரி, திருப்பத்தூர் விவசாயிகள் காரைக்குடி அலுவலகத்தை (செல்.9443115220) தொடர்பு கொள்ளவும். கூடுதல் விபரங்களுக்கு சிவகங்கை வேளாண் பொறியியல்துறை செயற் பொறியாளர் அலுவலக தொலை பேசி எண் 04575-240213என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு




சென்னை, தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கோடை வெயில்

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் சில தினங்களாக வாட்டி வதைத்து வந்த வெயிலின் தாக்கம் சற்று குறையத்தொடங்கியுள்ளது. ஆனால் தமிழகத்தில் ஒரு சில மாவட்டங்களில் கோடை வெயில் வறுத்தெடுத்து வருகிறது. ‘அக்னி’ நட்சத்திரம் விரைவில் தொடங்க உள்ள நிலையில் ஆறுதல் அளிக்கும் வகையில் சில தினங்களாக நெல்லை, தூத்துக்குடி, தேனி, திருவள்ளூர், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இந்தநிலையில் இன்று (புதன்கிழமை) தமிழகம், புதுச்சேரியில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மழை பெய்யும்

இதுகுறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

வங்கக்கடல் காற்று மற்றும் அரபிக்கடல் காற்று ஆகியவை ஒன்றாக இணைந்துள்ளது. இதன் காரணமாக மேலடுக்கில் நிலவும் காற்றின் போக்கு மழை பெய்தவற்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக

அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் அநேக இடங்களில் மழை பெய்யும். சென்னையை பொருத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் மழை பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

திருவள்ளூரில் 11 செ.மீ. மழை

தமிழ்நாட்டில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–

பள்ளிப்பட்டு, செங்கம், திருவள்ளூரில் தலா 11 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் 7 செ.மீ., உடுமலைப்பேட்டை, கலவையில் தலா 6 செ.மீ., வேலூர், போலூர், சங்கரன்கோவில், பூண்டி, ஆம்பூரில் தலா 5 செ.மீ., ஆரணி, கொடைக்கானலில் தலா 4 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. பொள்ளாச்சி, கோத்தகிரி, அவினாசி, பொன்னேரி, சூலூர், வாலஜா, சாத்தனூர், பழனி, திருக்கோவிலூரில் தலா 3 செ.மீ., வாணியம்பாடி, கேட்டி, பெரியகுளம், தாமரைப்பாக்கத்தில் தலா 2 செ.மீ. மழை, உத்தமபாளையம், ஆண்டிப்பட்டி, அம்பாசமுத்திரம், காங்கேயம் உள்ளிட்ட பகுதிகளில் தலா 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

## நதிநீர் இணைப்பு திட்டத்தை விரைவுபடுத்துகிறது, மத்திய அரசு



புதுடெல்லி, நதிநீர் இணைப்பு திட்டம் குறித்து கருத்து ஒற்றுமையை ஏற்படுத்த மத்தியஅரசு,பணிக்குழுஒன்றைஅமைத்துள்ளது.

நதிநீர்இணைப்பு

நதிநீர் இணைப்பு திட்டம் நீண்ட காலமாக பேசப்பட்டு வருகிறது. இத் திட்டத்தை நிறைவேற்ற தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முனைப்புடன்

உள்ளது. ஆனால், இந்த திட்டத்துக்கு சில மாநில அரசுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. முதலில், இந்த முட்டுக்கட்டைகளை அகற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

பணிக்குழு

அதன்படி, மாநிலங்களிடையே கருத்து ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக, பணிக்குழு ஒன்றை மத்திய நீர்வள அமைச்சகம் நேற்று அமைத்தது. இக்குழுவின் தலைவராக பி.என்.நவலவாலா செயல்படுவார். இக்குழு, நாடு முழுவதும் உள்ள அனைத்து நதிகளையும் இணைப்பது தொடர்பான எல்லா பிரச்சினைகளையும் கையில் எடுக்கும். திட்டத்தை விரைவாக நிறைவேற்றும் வகையில், மாநிலங்களிடையே கருத்து ஒற்றுமை ஏற்படுத்த பாடுபடும். தற்போதைய திட்டப்படி நதிகளை இணைக்க முடியாத இடங்களில் மாற்றுத்திட்டம் பற்றியும் ஆய்வு செய்யும். மாநிலத்துக்குள் ஓடும் நதிகளையும், மாநிலம் விட்டு மாநிலம் ஓடும் நதிகளையும் இணைப்பதற்கு இக்குழு வழிவகுக்கும்.

சாத்தியக்கூறு

நதிகள் இணைப்புக்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை முடிப்பதற்கான காலக்கெடு பற்றி சிபாரிசு செய்யும். அனைத்து நதிகளையும் இணைப்பதற்கான காலக்கெடுவையும் சிபாரிசு செய்யும். நதிகள் இணைப்பு திட்டத்துக்கு நிதி திரட்டுவதற்கான பல்வேறு வழிமுறைகளையும் சிபாரிசு செய்யும். நதிகள் இணைப்பு திட்டத்தின் பொருளாதாரரீதியான சாத்தியக்கூறுகள், சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள், பாதிக்கப்பட்ட மக்களின் மறுகுடியேற்ற திட்ட ஏற்பாடுகள் ஆகியவை குறித்து இந்த பணிக்குழு உரிய வழிகாட்டுதல்களை வழங்கும். மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டதகவல்கள்கூறப்பட்டுள்ளன.

**<u>விவசாயிகளின் நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு தாரைவார்க்காது; பா.ஜனதா தலைவர் அமித்ஷா பேச்சு</u>**



புதுடெல்லி, விவசாயிகளின் நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு தாரைவார்க்காது என்று பா.ஜனதா தலைவர் அமித்ஷா கூறினார்.

நிலம் கையகப்படுத்தும் மசோதா

மத்திய அரசு கொண்டுவந்த நிலம் கையகப்படுத்தும் சட்டதிருத்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதனால் அந்த மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், மேல்-சபையில் நிறைவேற்றப் படாமல் உள்ளது. இதனால் மீண்டும் ஜனாதிபதி இதுதொடர்பாக அவசர சட்டம் பிறப்பித்து உள்ளார். பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதையொட்டி அதற்கு தயார்படுத்தும் வகையில் டெல்லி காந்தி மைதானத்தில் பாரதீய ஜனதா தொண்டர்கள் மத்தியில் கட்சி தலைவர் அமித்ஷா, உள்துறை மந்திரி ராஜ்நாத்சிங் ஆகியோர் பேசினார்கள். அப்போதுஅமித்ஷாபேசியதாவது:-

தனியாருக்கு வழங்கப்படாது.விவசாய நிலங்கள் தனியார் நிறுவனங்களுக்கு கொடுப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் சட்டம் கொண்டுவரப்படுவதாக கூறி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்துகின்றன. விவசாயிகளின் ஒரு அங்குல நிலம் கூட தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட மாட்டாது. இந்த நிலம் கிராமங்களின் மேம்பாட்டுக்காகவும், விவசாயிகளின் நிலங்களுக்கு தண்ணீர் வழங்குவதற்காகவும் தான் பயன்படுத்தப்படும். எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தை முறியடிக்க பாரதீய ஜனதா தொண்டர்கள் இந்த தகவல்களை ஒவ்வொரு கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும். பீகாரில்பா.ஜனதாஆட்சி

பீகார் மாநிலத்தில் 12 சர்க்கரை ஆலைகளுக்கு சொந்தமான நிலங்கள் எங்கே

சென்றது என்பதை முதல்-மந்திரி நிதிஷ்குமார் விளக்க வேண்டும். ஆனால் அவர் தொடர்ந்து இந்த விஷயத்தில் மவுனமாக இருந்து வருகிறார். அந்த நிலங்களை அவர் தனது நண்பர்களுக்கும், மந்திரிகளின் உறவினர்களுக்கும் வழங்கியுள்ளார். இதனால் பீகார் மாநில மேம்பாட்டுக்கான ரெயில்வே மற்றும் சாலை திட்டங்கள் முடங்கியுள்ளன. பீகாரில் அவர்களது கூட்டணிக்கு யார் தலைவர், நிதிஷ்குமாரா? ராப்ரிதேவியா? என்பது தெரியவில்லை. பூஜ்ஜியத்துடன், பூஜ்ஜியத்தை கூட்டினாலும் பூஜ்ஜியம் தான் வரும். அங்கு நடைபெறும் காட்டாட்சியை பா.ஜனதா தொண்டர்கள் முடிவுக்கு கொண்டுவர வேண்டும். பீகாரில் அடுத்து பாரதீய ஜனதா தான் ஆட்சிக்கு வரும். இவ்வாறு அவர் பேசினார்.

<u>**நிச்சயமாக இது நல்ல தொடக்கம்**</u>




தூத்துக்குடி மாவட்டத்தில் ஆண்டுதோறும் தாமிரபரணி ஆற்றில் இருந்து ஏராளமான தண்ணீர் கடலில் வீணாக கலக்கிறதே என்று எல்லோரும் சோகக்குரல் எழுப்புவது வாடிக்கை. வடகிழக்கு பருவ மழையின்போது மட்டும் தாமிரபரணியில் இருந்து 20 டி.எம்.சி. தண்ணீர்வரை சேமிக்க வழியில்லாமல் கடலில் போய் கலந்து வீணாகிறது என்ற குறையை எல்லோரும் சொல்வதுண்டு. ஆனால், இந்த தண்ணீர் ஸ்ரீவைகுண்டம் தடுப்பு அணையில் இருந்து சீறிப்பாயும் தண்ணீர்தான். தூத்துக்குடி மாவட்ட ம.தி.மு.க. செயலாளரான வக்கீல் ஜோயல், இதற்காக சென்னையில் உள்ள பசுமை தீர்ப்பாயத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தார். ஸ்ரீவைகுண்டம் அணை 1869–ம் ஆண்டு பக்கிள் துரை என்ற ஆங்கிலேய கலெக்டரின் முயற்சியால் கட்டப்பட்டது. ஆனால், 146 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் தூர்வாரப்பட்டதில்லை. இங்கு தூர்வாரினால் கூடுதலாக 8 டி.எம்.சி.

தண்ணீரை சேமித்து, இன்னும் ஒரு லட்சம் ஹெக்டேர் அதாவது 2.5 லட்சம் ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசன வசதி அளிக்கும் என கூறியிருந்தார். மாவட்ட நிர்வாகம் இதுகுறித்து நடத்திய ஆய்வில், இந்த அணையை தூர்வார 4.5 கோடிதான் செலவாகும். இப்படி தூர்வாரும்போது எடுக்கும் மணலை ஏலம்போட்டாலே 70 சதவீத தொகை கிடைத்துவிடும் என தெரிவித்து இருந்தது. தமிழக அரசு தூர்வார தயாராக இருந்தாலும், மத்திய அரசாங்க சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் ஒப்புதல் தராததே இந்த தாமதத்துக்கு காரணம் என்று கூறப்பட்டுள்ளது. உடனடியாக மீண்டும் மத்திய அரசாங்கத்துக்கு கடிதம் அனுப்ப மாவட்ட நிர்வாகத்துக்கும், அதை பரிசீலனை செய்ய மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கும் பசுமை தீர்ப்பாய உறுப்பினர்களான நீதிபதி ஜோதிமணி, ஆர்.நாகேந்திரன் ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர். தாமிரபரணிக்கு ஒரு விடிவு காலத்தின் வாசல் திறந்துவிட்டது. தமிழ்நாட்டில் ஆற்றுவளம் என்பது மிகமிக குறைவு. மழை வளமும் குறைவு. ஆனால், மழை காலங்களில் பெய்யும் மழை தண்ணீரை சரியான முறையில் தேக்கிவைக்க வசதி இல்லாததால், ஆண்டு தோறும் ஏராளமான தண்ணீர் வீணாக கடலில் போய் கலப்பதை பார்க்கும்போது கண்களில் ரத்தக்கண்ணீர்தான் வரும். முறையாக சேமித்தால் குடிநீர் பற்றாக்குறை இல்லாத நிலை மட்டுமல்ல, விவசாயத்துக்கும் போதிய தண்ணீர் கிடைத்து பாசன பரப்பும் உயரும். தமிழ்நாட்டில் மொத்தம் 34 ஆறுகள் இருக்கின்றன. 39 ஆயிரத்து 202 ஏரிகள் இருக்கின்றன. இதைத்தவிர, ஏராளமான குளங்கள், குட்டைகள் இருக்கின்றன. 89 அணைகளும் இருக்கின்றன. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 911.60 மில்லி மீட்டர் மழை பெய்கிறது. பெரும்பாலான ஏரிகள், குளங்கள், அணைகள் ஆண்டு கணக்கில் சரியாக தூர்வாரப்படாததாலும், ஆழப்படுத்தாததாலும் மேடாகி, நீர் கொள்ளளவு பெரிதும் குறைந்துவிட்டது. ஆறுகளில் மணலை அள்ளாமல் இருந்தால் நீர்ப்பிடிப்பு அதிகமாகி, அருகில் உள்ள நிலத்தடிநீர் மட்டம் உயரும். ஆறுகளில் மணலை அள்ளுவதால் நீர் நிற்காமல் ஓடி கடலில் போய்விழுகிறது.

அதே நேரத்தில், ஏரிகள், அணைகளில் தூர்வாரினால் நீர்மட்டம் உயரும். ஆனால், தமிழ்நாட்டில் இதற்கு நேர்மாறான செயல்களே நடக்கின்றன. இதை சரியாக்க ஒரு நல்ல தொடக்கத்தை ஜோயல் ஆரம்பித்துவிட்டார். ஸ்ரீவைகுண்டம் தடுப்பு அணை போல, மேட்டூர் உள்பட அனைத்து அணைக்கட்டுகளில் முதல்கட்டமாகவும், அடுத்து அனைத்து ஏரிகள், குளங்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றி தூர்வாரும் நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்கவேண்டும். மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமும் முட்டுக்கட்டை போடாமல் துணை நிற்கவேண்டும்.

## <u>பொள்ளாச்சி, வால்பாறை பகுதியில் பலத்த மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி</u>

பொள்ளாச்சி, வால் பாறை பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேயிலை செடிகள் வால்பாறை பகுதியில் கடந்த சில நாட்களாகவே மாலை நேரங்களில் பல்வேறு இடங்களில்கனமழையும், ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்து வருகிறது.இதனால் கடந்த இரண்டு மாதமாக நிலவி வந்த கடு மையான வெப்பம் குறைந்து, வால்பாறை பகுதியில் குளிர்ச் சியான காலநிலை மாறி வரு கிறது. இதனால் தேயிலைச் செடிகள் துளிர்விட்டு வளரத் தொடங்கி உள்ளன. வறண் டுகிடந்த வனப்பகுதி களில் இருக்கும் நீரோடை களுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.இதனால் இந்த ஆண்டு கோடை காலத் தில் வெப்பத்தின்தாக்கம் குறைய வாய்ப்பு உள்ளது. நல்ல இதமான காலநிலை நிலவுவதால் மே மாதம் முதல் வாரத்தில் கொண்டாட உள்ள கோடை விழாவிற்கு ஏராள மான சுற்றுலா பயணிகள் வரு வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

ஆறுகள், நீரோடைகள், நீர்வீழ்ச்சிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளதால், அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. சோலையார்அணைக்கு விநாடிக்கு 135.53 கன அடித் தண்ணீர் வந்து

கொண்டிருக் கிறது. அணையிலிருந்து மாற் றுப்பாதைகள் வழியாக 138.31 கன அடித்தண்ணீர் பரம்பிக் குளம் அணைக்கு திறந்து விடப்பட்டு உள்ளது. சோலை யார்அணையின் நீர்மட்டம் 6.32 அடியாக உயர்ந்துள் ளது. இதேபோன்று ஆழியாறு, பரம்பிக்குளம் அணைகளுக் கும் நீர்வரத்து அதிகரித்து உள் ளது. பொள்ளாச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக மாலை நேரங்களில் வானம் மேக மூட் டத்துடன் காணப்படு கிறது. ஒரு சில நேரங்களில் பலத்த சூறாவளி காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. தொடர்ந்து வால்பாறை, பொள்ளாச்சி பகுதியில் மாலை நேரங்களில் கோடை மழை பெய்து வரு வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பொள்ளாச்சியில் 89 மி.மீ மழை

பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி களில் நேற்று காலை 8 மணி நில வரப்படி பதிவான மழை அளவு விவரம் வருமாறு:–

சோலையார் – 20 மி.மீ.,பரம் பிக்குளம்– 11 மி.மீ., ஆழியாறு – 3 மி.மீ., திருமூர்த்தி – 12 மி.மீ., அமராவதி–20 மி.மீ., அப்பர் நீரார்– 10 மி.மீ., லோயர் நீரார்– 5 மி.மீ., வால் பாறை – 4.4 மி.மீ., வேட்டைக் காரன்புதூர்– 20 மி.மீ., பொள் ளாச்சி – 89 மி.மீ., மணக் கடவு–81.6 மி.மீ., நெகமம் – 65 மி.மீ., காடம்பாறை – 10 மி.மீ., அப்பர் ஆழியாறு– 13 மி.மீ., தூணக்கடவு– 5 மி.மீ.,பெரி வாரிப்பள்ளம்–5 மி.மீ., நல் லாறு– 11 மி.மீ., நவமலை – 2 மி.மீ., சுல்தான்பேட்டை–13 மி.மீ.

## <u>நாகர்கோவில் பகுதியில் தொடர் மழை</u>

குமரி மாவட்டத்தில் கோடை வெயிலுக்கு இடையே அவ்வப்போது விட்டு,விட்டு மழை பெய்து வருகிறது. குமரி மேற்கு மாவட்டப்பகுதிகள் மற்றும் அணைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் கோடை வெயிலின் உஷ்ணம் சற்று குறைந்துள்ளது. இந்தநிலையில் அரபிக்கடல் காற்றும், வங்கக்கடல் காற்றும் சேர்ந்துள்ளதால் தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் 2 நாட்கள் (நேற்றும், இன்றும்) மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதன்படி நாகர்கோவில்

பகுதியில் நேற்று பகலில் கடும் வெயில் இருந்தது. மாலையில் வானம் கருமேகக்கூட்டங்களுடன் இருண்டு காட்சியளித்தது. மாலை 5.30 மணி அளவில் மழை பெய்யத் தொடங்கியது. திடீரென கொட்டிய இந்த மழை சுமார் அரை மணிநேரத்துக்கும் மேலாக நீடித்தது. இதனால் நாகர்கோவில் நகரின் முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழை நாகர்கோவில் சுற்று வட்டாரப்பகுதிகள் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தது. நேற்று காலை நிலவரப்படி பாலமோர் பகுதியில் 4.5 மி.மீ., குளச்சல் 4.6 மி.மீ., முள்ளங்கினாவிளை 4 மி.மீ. சிற்றார்–1 1.2 மி.மீ. என்ற அளவில் மழை பதிவாகியிருந்தது. அணைகளுக்கு குறைந்த அளவில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தொடர் மழையால் அணைகளின் நீர்மட்டமும் சிறிது, சிறிதாக உயர்ந்து கொண்டிருக்கிறது.

## <u>தோவாளை மார்க்கெட்டில் பூக்கள் விலை உயர்வு பிச்சி கிலோ ரூ.625–க்கு விற்பனை</u>

நாகர்கோவில், தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பூக்களின் விலை அதிகரித்து காணப்பட்டது. பிச்சி பூ ஒரு கிலோ ரூ.625–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>பூ மார்க்கெட்</u>

தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு குமரி மாவட்டம் மற்றும் நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். எப்போதும் மார்க்கெட்டில் விவசாயிகள், வியாபாரிகள் என கூட்டம் அலைமோதும்.

<u>பிச்சி கிலோ ரூ.625</u>

இந்த நிலையில் நேற்று பூக்களின் விலை அதிகரித்து காணப்பட்டது. நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.250–க்கு விற்கப்பட்ட பிச்சி பூ நேற்று ரூ.625–க்கு விற்கப்பட்டது. மேலும், இது போல முல்லை ரூ.500–க்கும், மல்லிகை ரூ.200–க்கும், கனகாம்பரம் ரூ.200–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.150–க்கும்,

வெள்ளை சிவந்தி ரூ.150–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.120–க்கும், சிவந்தி ரூ.120–க்கும், சம்பங்கி ரூ.100–க்கும், பட்டன்ரோஸ் ரூ.100–க்கும், அரளி ரூ.100–க்கும், மரிக்கொழுந்து ரூ.50–க்கும், வாடாமல்லி ரூ.30–க்கும், கேந்தி ரூ.30–க்கும், கொழுந்து ரூ.30–க்கும், கோழிப்பூ ரூ.25–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.15–க்கும், மாம்பழ கேந்தி ரூ.15–க்கும், துளசி ரூ.15–க்கும், பச்சை ரூ.5–க்கும் விற்பனை செய்யப்பட்டது. பூக்களின் இந்த விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் “ நாளை (இன்று) செவ்வாய்க்கிழமை தமிழ் புத்தாண்டு என்பதால் பூக்களின் தேவை அதிகமாக இருந்தது. வியாபாரிகள் பூக்களை போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர். இந்த காரணத்தால் தான் பூக்களின் விலை அதிகரித்துள்ளது’’ என்றார்.

**<u>சித்திரை முதல் நாளில் விவசாயம் செழிக்க வேண்டி பொன்னேர் பூட்டிய விவசாயிகள் நெல் மணிகளை விதைத்தனர்</u>**

தமிழ் வருடப் பிறப்பை விவசாயிகள் உற்சாகமாக கொண்டாடுவார்கள். கிராமங்களில் சித்திரை முதல் நாளில் வயலில் உழுது நெல் விதைகளை தூவி விவசாயத்தை தொடங்குவார்களா. இதற்கு பொன்னேர் பூட்டுதல் நல்லேர் கட்டுதல் என அழைப்பதும் வழக்கம். நவீன கருவிகளை கொண்டு வயலில்அனைத்து பணிகளையும் செய்தாலும் இன்னும் சில விவசாயிகள் சித்திரை முதல் நாளில் கலப்பை கொண்டு எருதுகள் பூட்டி வயலை உழுது பணிகளை தொடங்குகின்றனர்.பூதலூரில் நல்லேர் கட்டும் பணி சித்திரை முதல் நாளான நேற்று காலை நடைபெற்றது. வயலில் வாழை இலை விரித்து வைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டது. தேங்காய் உடைத்து தீபாராதனை காண்பிக்கப்பட்டவுடன், காளைகள் பூட்டிய கலப்பையை கொண்டு வயலை உழவு செய்து பணிகளை தொடங்கினார்கள். இந்த ஆண்டு பங்குனி கடைசி நாளில் மழை பெய்ததால் விவசாயம் நன்றாக இருக்கும் என்று கூறப்பட்ட போதிலும். மழை பெய்து ஆறுகளில் தண்ணீ£ வந்து விவசாயம் செழிக்க வேண்டிக்கொண்டு நல்லேர் பூட்டும்நிகழ்ச்சியில் விவசாயிகள் கலந்து கொண்டனர்.